வரவைவிடச் செலவதிகம்

மதுவிலக்குத் திட்டத்தாலேற்படும் செலவு

ஸ்ரீமான் வி. ஆர். ரெட்டி பிரசங்கம்

ராஜாங்க சபையில் பட்ஜெட் விவாதம்

சென்னை, செப் 9—

இன்று பிற்பகல் 2-மணிக்கு சென்னை ராஜங்க சபை கனம் டாக்டர் யூ. ராமாராவின் தலைமையில் மீண்டும் கூடி மாகாண வரவு செலவு திட்டத்தைப்பற்றி விவாதித்தது.

விவசாயக் கருவிகள்

முதலில் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டது. ரயத்துக்களுக்கு விவசாயக் கருவிகள் வாங்கிக் கொடுப்பதற்கும் வயல்களுக்கு வேலியடைக்க முட்கள் சம்பாதித்துக் கொடுப்பதற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று ராவ்பகதூர் எம். ராமகிருஷ்ண ரெட்டி கேட்டார்.

ஒவ்வொரு விவசாய டெமான்ஸ்டிரேட்டர் இருக்குமிடத்திலும் விவசாயக் கருவிச்சாலை வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அதிலிருந்து விவசாயக் கருவிகள் விற்கப்படுகின்றனவென்றும் சென்ற வருஷம் அதிக விவசாயக் கருவிகள வாங்க ஒரு லக்ஷத்து இருபதினாயிர ரூபாய் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டதென்றும் இவ்வருஷத்திய பட்ஜட்டில் ரூ 32000த்து சொச்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் கனம் வி ஐ முனிசாமி பிள்ளை பதில் கூறினார்.

ஜில்லா போர்டு பிரிவினை

பிரிக்கப்பட்ட ஜில்லா போர்டுகளை மீண்டும் ஒன்று சேர்க்க சர்க்கார் உத்தேசிக்கிறார்களாவென்றும், அப்படி உத்தேசமிருந்தால் எல்லா ஜில்லா போர்டுகளையும் ஒன்று சேர்க்கப் போகிறார்களா அல்லது சிலவற்றையே ஒன்று சேர்க்கப் போகிறார்களாவென்றும், ராவ்பகதூர் என் ஆர். சாமியப்பாமுதலியார் கேட்டார்.

கனம் கோபால் ரெட்டி:—மேற்படி விஷயத்தைப்பற்றிச் சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்

பட்ஜெட் விவாதம்

ஸ்ரீமான் வி. ஆர் ரெட்டி

[illegible]

காங்கிரஸ் அதிகார வர்க்க ஒற்றுமை

[illegible]

வரவைவிட செலவதிகம்

நமது மாகாண வரவு செலவு திட்டத்தில் ஒன்றுக்கொன்று முரணைபல விஷயங்களடங்கியிருக்கின்றனமுதன்முதலாகஇந்த பட்ஜட்டில் செலவை விட வரவு அதிகமாயிருப்பது போல் காணப் பட்டாலும் நன்குக ஆராய்ந்து பார்த்தால் வரவைவிட செலவே அதிகமாகக் காணப்படுகிறது. இரண்டாவதாக ஜவுளிக் கடைக்கு லைசென்ஸ் கட்டணம் விதிக்கும் விஷயம் கவனிக்கத் தக்கது. முதலாவதாக ஜவுளிக் கடைக்கு விதிக்கும் வரி ராட்டைத் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்குமென்று கூறப்பட்டது. எப்படிப் பாதுகாப்பு அளிக்குமென்று எனக்குத் தெரியவில்லை. பட்ஜெட்டில் தேவையான புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை. இந்தப் புதிய வரியிலிருந்து அதிக வருமானம் கிடைக்காதென்றும், பிரதம மந்திரியின் பிரசங்கத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த வரி ராட்டைத் தொழிலுக்கு எப்படி பாதுகாப்பளிக்கும். போதிய வருமானம் கிடைக்காத இவ்வரியை விதிக்க வேண்டிய காரணமென்ன.

மதுவிலக்குத் திட்டம்

நமது மந்திரிகள் கிராமப்புனருத்தாரணத்துக்குப் பெரியத் திட்டம் வைத்திருக்கிறார்கள். தவிர மதுவிலக்கு திட்டமிருக்கிறது. ஆனால் இந்த திட்டங்களால் செலவு என்ன வற்படுமென்ற புள்ளிவிவரங்கள் பட்ஜட்டில் காணப்படவில்லை. 'என்ன செலவானாலும் சரி' இந்த மதுவிலக்கு திட்டம் அமுலுக்குவந்தாகவேண்டுமென்று பிரதம மந்திரி கூறுகிறார். என்ன செலவானாலும் சரி என்ற கொள்கை மிகவும் தவறானது மாகாணசெல்வ நிலைக்கு நன்மை பயக்கக்கூடியதல்ல. வரவுக்குத்தக்கபடி தான் செலவிருக்கவேண்டும்.

இனிப்பான கள் குடிப்பதைத் தடைசெய்யக்கூடாதென பாபு [illegible]

[illegible]

கிராம அதிகாரிகள்

[illegible]

சபைத் தலைவர்:—[illegible]

ஸ்ரீமான் வி. ஆர். ரெட்டி:—[illegible]

சீனு வெற்றி பெறும்

சீன தளகர்த்தர் நம்பிக்கை

ஜெனரல் பாங்செென் ஊவுடன் பேட்டி

ரங்கூன் (ஆகாயத்தபால்)

ஐரோப்பாவிலிருந்து இம்பீரியல் ஏர்வேஸ் விமானத்தில் ரங்கூன் வந்திறங்கிய சீன ராணுவத் தலைவரான ஜெனரல் பாங்செென் ஊவை அஸோஸியேடெட் பிரஸ் நிருபர் பேட்டி கண்டு பேசிய போது அவர் கூறியதாவது:—

சீனவை ஆக்ரமிக்க ஜப்பான் முயலுகிறது. சீனு பொறுமையுடன் இருந்தாலும் தனது சுயேச்சையையே இழக்கும்படியான சமயத்தில் அது தனது தேசிய வாழ்க்கையை நிலைக்கச் செய்வதற்காகக் கடைசிவரை போராடித்தான் ஆகவேண்டும். இந்த யுத்தத்தில் ஜப்பான் ஜெயித்தால் அது பலாத்கார சக்தி, அநீதம் இவற்றின் வெற்றியாக இருக்கும். சீனு ஜெயித்தால் அது நீதி, சமாதானம் இவற்றின் வெற்றியாக இருக்கும். நாடு பிடிக்கும் ஆசையின்றி நான் ஒன்று சொல்லுவேன் அதாவது சீனு ஜெயித்தால்தான் தூரக் கிழக்கு திசை நாடுகளில் மட்டுமின்றி உலகிலும் சமாதானம் ஏற்படும். மானிடவர்க்கத்தின் எதிர்கால வாழ்வே சீனுவில் நிகழும் சம்பவங்களின் முடிவைப் பொருத்திருக்கிறது.

இறுதியில் சீனுதான் வெற்றி பெறுமென பூரணமாக நம்புகின்றேன் ஜப்பான பார்வைக்கு மிக்க தடபுடலாக இருப்பினும் அதன் தேசிய அமைப்பும் ராணுவ அமைப்பும் பலஹீனமாக இருக்கிறது தற்கால போர் முறையில் மிக்க பலம் வாய்ந்த ராணுவமும் தனக்கு வெற்றிகிடைக்குமென்று நம்பியிருக்க முடியாது. அதற்குள்ள பொருளாதார சமூக ஆதாரவைப் பொறுத்தே அதன் பலமிருக்கிறது.

ஜப்பானில் அதிருப்தி

ஜப்பான் மிக்க எளிய தேசம். அதன் வருமானமனைத்தையும் அதன் ராணுவம் விழுங்கி வருகிறது. சென்ற 6 வருஷங்களில் அதன் வரவைப்போல செலவு 2 மடங்கு அதிகமாக இருக்கிறது. 2000 கோடி எண் கடன் அதற்கு ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானில் பாதி ஜனங்கள் வரி கொடுக்க முடியவில்லை. இன்னும் பாதி ஜனங்கள் முக்கிய வரிகளைக் கொடுப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஜனங்களுள் கஷ்டம் அதிகமாகவிருக்கிறது ராணுவ வகுப்பினர்மீது ஜனங்களுக்குமிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது ராணுவ உத்தியோகஸ்தர்களுள் இருந்து வரும் பொறுமையால் சமீபத்தில் பல கலகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இரும்பு. நிலக்கரி பெட்ரோல் முதலிய அந்நிய மூலப் பொருள்களின்றி ஜப்பானின் யுத்தக் கைத்தொழிற்சாலைகள் நடைபெறமுடியா. அந்நிய என்ஜின்களையே ஜப்பானிக விமானங்கள் நம்பியிருக்கின்றன. இதனால் ஜப்பான் நெடுங்காலம் நடைபெறக் கூடிய யுத்தத்தை நடத்த முடியாது. தற்போது சீனு ஒன்றுபட்டிருப்பதால் அதனை ஜப்பான் வளைத்துக்கொள்ள முடியாது. 45 கோடி சீனர்களும் தேசீய சுதந்திரத்தில் தீர்மானங் கொண்டிருக்கின்றனர். சீனுவில் ஏராளமாக இயற்கைச் செல்வமும் ஜனங்களும் இருக்கின்றனர். இதனால் சீனு வரையறையற்ற காலம் வரை எதிர்த்து நிற்க முடியும். சர்வதேச சங்கம் தனது ஒப்பந்தங்களை பசிபிக் மகாசமுத்திரத்தை அடுத்த தேசங்களும் உலகத்தாறும் மறுக்கும்படியான தவறை மீண்டும் செய்யக்கூடாது. உலக பத்திரிகைகள் சீனு வெற்றியடைந்தால்தான் மனித வர்க்கத்திற்கே மேம்பாடு ஏற்படுமென்பதை எங்கும் பறையறைவிக்க வேண்டும்.

மாதர் மறுமண சங்க ஆண்டு விழா

காரைக்குடி, செப் 9—

காரைக்குடி மாதர் மறுமண சகாய சங்கத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவு விழா 15-9-37 புதன்கிழமை அமராவதிபுதூரில் நடைபெறும். அதற்கு டாக்டர் ஸ்ரீமதி முத்துலெட்சுமி ரெட்டி தலைமைவகிக்க இசைந்திருக்கிறார் விழா விமரிசையாக நடைபெற ஏற்பாடு நடைபெறுகிறது

வேலூரில் பிளேக்

ஜனங்களுக்கு எச்சரிக்கை

முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள்

(நமது நிருபர்)

வேலூர், செப் 9—

வேலூரிலும் பிளேக் பரவிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. அதன் காரணமாக கலெக்டர் ஸ்ரீமான் வெங்கடராமன் முன் ஜாக்கிரதையான நடவடிக்கை எடுத்துக்கொள்வதன் பொருட்டு தமது சுற்றுப்பிரயாண நடைமுறையை ரத்து செய்துவிட்டார்.

இன்று காலை முனிஸிபல் சுகாதார உத்தியோகஸ்தர் காப்டன் ரங்கசாமியும், கமிஷனரும் கலெக்டரைக்கண்டு பேசினர். பிறகு, முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் ராமஸ்வாமி முதலியார். நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுவது விஷயமாக அவருடன் டெலிபோனில் பேசினர். பொதுஜனங்களுக்கு எச்சரிக்கை செய்து 10000 நோட்டீஸ்கள் அச்சடிக்கப்பட்டு தயாராயிருக்கின்றன. முனிசிபல் அதிகாரிகள் ஊசிகுத்தும் வேலையை நடத்திக்கொண்டு வருகின்றனர். கிடங்குக் கடைகளுக்குப் புகைபோடப்படுகின்றன. பிளேக் பரவாமல் தடுக்க அதிகாரிகள் எல்லாவித முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். இதுவரை ஒருவரும் இறக்கவில்லை.

சென்னை மந்திரிகளுக்கு விருந்து

சென்னை, செப் 9—

செவ்வாய்க்கிழமை இரவில் சென்னை அட்வகேட் ஸ்ரீமான் எஸ். துரைசாமி ஐயர் சென்னை பிரதம மந்திரி கனம் ஸி. ராஜகோபாலாச்சாரியாருக்கும் இதர மந்திரிகளுக்கும் விருந்து நடத்தினர். 100 அதிதிகளுக்கு மேல் வந்திருந்தனர். சென்னை மந்திரிகளும் அவர்களது காரியதரிசிகளும் கனம் யு. ராமாராவ், கனம் புலுசு சாம்பமூர்த்தி, மிஸஸ் ருக்மணி லக்ஷ்மீபதி, மேயர் கே. ஸ்ரீராமுலு நாயுடு, ஸ்ரீமான்கள் கே. ஸ்ரீனிவாசன், ஸி. ஆர். ஸ்ரீனிவாசன, தாசா சுப்பாராவ், மிஸஸ் அம்முசாமிநாதன், ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், ஜமால் முகமது, அப்துல் ஹமீதுகான், ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியவர்கள் வந்திருந்த அதிதிகளுள் முக்கியமானவர்கள்.

ஐ. மா ஜமீன்தார்கள் கோரிக்கை

வரிவசூல் தடைபற்றி கவர்னருக்கு வேண்டுகோள்

லக்ஷ்மணபுரி, செப் 4–

மோர்தாபாத் ஜில்லாவைச் சேர்ந்த ஜமீன்தார்களும் முபைதார்களும் இப்பொழுது கவர்னர்களுக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கின்றனர். குடிகள் வரிபாக்கிக்காக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதை நிறுத்திவைக்கும்படி இப்பொழுது சட்டஞ் செய்யப்பட்டிருப்பது இதில் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார்கள் ஸர்க்காருக்கு வரியைச்செலுத்தியாகிவிட்டதென்றும் குடிகளிடமிருந்து அவர்கள் வாரம் பெறாமல் செய்தால் அவர்களுக்கு மிகுந்த கஷ்டமேற்படுமென்றும், ஜமீன்தார்கள் உரிமைகளில் இவ்விதம் குறுக்கிடுவது சட்டவிரோதமென்றும் அதைத் தடுக்கவேண்டுமென்றும் அல்லது ஜமீன்தார்கள் வரியையாவது இந்த அளவுக்குத் திரும்பக்கொடுக்க வேண்டுமென்றும் இந்த மகஜரில் கோரப்பட்டிருக்கிறது.

மாகாண காங்கிரஸ்கமிட்டி காரியதரிசி வேண்டுகோள்

லக்ஷ்மணபுரி, செப் 4—

ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி இப்பொழுது ஜில்லா நகரக் கமிட்டிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றுக் கடிதத்தில் வாரபாக்கிபற்றிக் கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள உத்தரவை கிருஷிகர்கள் தப்பர்த்தஞ்செய்து கொள்ளக் கூடாதென்றும் தங்கள் வாரங்களை அவர்கள் செலுத்தி வரவேண்டுமென்றும், தனிப்பட்ட ஜமீன்தார்களைக் குறித்து [illegible] எதிராக துவேஷமூட்டக் கூடாதென்றும் கிருஷிகர்களிடையே தக்க பிரசாரஞ் செய்யவேண்டுமென்றும் இந்த சுற்றுக்கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

லாரி சொந்தக்காரர்கள்

பிரதம மந்திரியிடம் தூது

சென்னை. செப் 9—

சென்னை மாகாண லாரி சொந்தக்காரர் சங்கத் தலைவர், காரியதரிசி இவர்களது தலைமையின்கீழ் லாரி சொந்தக்காரர்களில் பலர் இன்று பிரதம மந்திரியைப் பேட்டிகண்டு தங்கள் குறைகள் பலவற்றைத் தெரிவித்துக்கொண்டனர். சென்ற 30-ந்தேதி இவர்கள் ஸ்தல ஸ்தாபன நிர்வாக மந்திரி, தொழில் மந்திரி. மராமத்திலாகா மந்திரி முதலியவர்களைப் பேட்டி கண்ட விஷயம் ஏற்கனவே பிரசுரமாகியிருக்கிறது.

லாரி போக்குவரத்து காரணமாக இன்று பொது மக்களுக்கு முக்கியமாக ரெயில்வே ஸ்டேஷன்களுக்கு வெகு தூரத்திலுள்ள கிராமங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு விசேஷ சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் தவிர பலருக்குப் பிழைக்க வழியுண்டாகியிருக்கிறதென்றும், இப்பொழுது லாரிகளின் போட்டியிருக்குமிடங்களுக்கு தென்னிந்திய ரெயில்வே எம். எஸ். எம். ரெயில்வே கம்பெனிகள் சாமான்களை எடுத்துச் செல்வதற்கான கட்டணங்களைக் குறைத்திருக்கின்றனவென்றும், ஆனல் இத்தகைய போட்டியில்லாத இடங்களுக்கு அவை மிக அதிகமான கட்டணங்களை வசூலித்துவருகின்றனவென்றும் இது லாரித்தொழிலையே ரெயில்வேக்கள் நசுக்கிச் செல்லுவதாக இருக்கிறதென்றும், லாரிகாரர்கள் ஏற்கனவேமாகாண கவர்ன்மெண்டுக்கு லைசென்ஸ் கட்டணம், பெட்ரோல்வரி முதலியவை மூலமாக ஏராளமான தொகைகளைச் செலுத்தி வருவதாகவும், வருஷம் ஒன்றுக்கு லாரி சொந்தக்காரர் ஒவ்வொருவரும் பற்பல வகைகளில் 770 ரூபாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுத்து வருவதாகவும், இதுவே லாரி தொழிலைக் கொல்லப் போதுமானதென்றும், தவிர சொந்த லாரிகள், வியாபார லாரிகள் இவ்விரண்டிற்கும் வரி வசூலிப்பதிலுள்ள வித்தியாசம் ஒழிந்து போக வேண்டுமென்றும், ரஸ்தாக்களுக்கேற்படும் பாதகங்களைப் பொருத்தே லாரிகளிடமிருந்து தொகைகள் வசூலிக்கப்பட வேண்டுமென்றும், லாரித் தொழில் நசுங்கிவிடுவதற்கான எந்த முயற்சியையும் கவர்ன்மெண்டார் செய்யக்கூடாதென்றும், ப்ரேக் பரிசோதனைக்கு முன்பு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றும், லாரிகளைத் திடீரெனச் சோதனை செய்வது நிறுத்தப்பட வேண்டுமென்றும், ஐரோப்பிய நாடுகளிலிருப்பது போன்று ஒரே மாகாண லைசென்ஸிங் போர்டு இருக்க வேண்டுமென்றும் லாரி சொந்தக்காரர்கள் ராஜாஜியிடம் அறிவித்தனர்.

இவ்விஷயங்களைக் கவனித்து வெகு சீக்கிரத்தில் தக்கது செய்வதாகப் பிரதம மந்திரி பதிலளித்தார். லாரி சொந்தக்காரர்கள் தங்களுக்காகச் சில விதிகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க முற்படவேண்டுமென்றும் யோசனை கூறினர்.

பிரெஞ்சிந்தியாவில் பால்ய விவாகத் தடை

திருநள்ளாறு, செப் 8—

பிரஞ்சு இந்தியாவில் எந்த ஆண் பிள்ளையும் 16 வயதுக்குள்ளும் பெண் பதினான்கு வயதுக்குள்ளும் கலியாணம் செய்துக் கொள்ளகூடாதென்று செய்திருந்த சட்டத்தை அமுலுக்கு கொண்டுவர பிரெஞ்சு குடியரசு தலைவர் ஸ்ரீமான் லெப்ரேன் அங்கிகரித்துவிட்டார்.

இதைமீறி கல்யாணத்தை நடத்தி வைப்பதற்கு உடந்தையாயிருப்பவர்களுக்கு 6 நாள் முதல் 30 நாள்வரை சிறைவாச தண்டனையும் 500 முதல் 5000 பிராங்க் வரையும் தண்டனை விதிக்கப்படுவார்கள். தவிர கலியாணமும் ரத்து செய்யப்படும். ஆனல் சிலவிசேஷ சந்தர்ப்பங்களில் கவர்னரின் உத்திரவுபெற்று மேல் கண்ட வயதுக்குள் கலியாணம் செய்யவும் ஒரு விசேஷ அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது —ந. நி.

திருப்பக்குழி கோவில் வழக்கு

தென்கலை வடகலை தகராறு

சென்னை, செப் 9—

கஞ்சீபுரம் தாலுகாவிலுள்ள திருப்பக்குழி கோவில் தென்கலைக் கோவிலெனத் தீர்மானித்து ஹிந்து மத ஸ்தாபன போர்டார் அக்கோவிலுக்கு 2 தென்கலையார்களையும் வடகலையாரில் ஒருவரையும் டிரஸ்டிகளாக நியமித்து ஸ்கீம் தயாரித்தார்கள்.

பிரஸ்தாபக்கோவில் சென்ற 29 வருஷங்களுக்கு முன்பே வடகலைக் கோவிலாகவிருந்திருக்கிறதென்றும், டிரஸ்டிகளில் மெஜாரிட்டியான ஸ்தானங்களை வடகலையாருக்கே கொடுக்கவேண்டுமென்றும், வடகலையார் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்கள். ஜில்லா ஜட்ஜ் வழக்கை தள்ளிவிட்டார்.

இதற்குமேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. தென்கலையார் டிரஸ்டிகளாக வேலை செய்யக்கூடாதெனத் தற்காலிகமாக ஒரு தடை உத்தரவையும் ஹைகோர்ட்டில் வடகலையார் பெற்றனர். அந்த தற்காலிகத் தடை உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென ஜஸ்டிஸ் நியூஸாம் முன்பாகத் தென்கலையார் இன்று மனுச் செய்துகொண்டார்கள்.

நீதிபதி தற்காலிகத் தடை உத்தரவை ரத்து செய்து அப்பீலை மூன்று மாதங்களுக்குள் விசாரிக்கவேண்டுமென்றும், அப்படி அப்பீல் விசாரணை 3 மாதங்களுக்கு மேலாகுமானல் தற்காலிக உத்தரவு பெற வடகலையார் மீண்டும் மனுச்செய்துகொள்ளலாமென்றும் உத்தரவிட்டார்.

ராவ்பகதூர் வி. டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் வடகலையார் தாப்பிலும், ஸ்ரீமான் கே. இ. ராஜகோபாலாச்சாரியார் தென்கலையார் தாப்பிலும், கே. சுப்பராவ் ஹிந்து மதஸ்தாபனபோர்டு சார்பாகவும் ஆஜரானர்கள்.

மனைவியைத் திரும்பப்பெற

கணவன் மனு

நெல்லூர் நவாப்பேட்டையைச் சேர்ந்த பி. பார்த்தசாரதி தமது மனைவியான அலமேலுஅம்மாளைத் தம்மிடமனுப்பும்படி தமது மாமனாரான வி. ஸ்ரீனிவாசாச்சாரிக்கு உத்தரவிடவேண்டுமென ஜஸ்டிஸ் பர்ன், ஜஸ்டிஸ் லக்ஷ்மணராவ் ஆகியவர் முன்பாக மனுச்செய்துகொண்டார்.

அலமேலு அம்மாள் மைனர் பெண். அவளைத் தமது மாமனர் ஒருகலியாணத்துக்கு அழைத்துப் போனதாகவும் திரும்ப அனுப்பவில்லையென்றும் மனுதார் கூறினர்.

அலமேலுஅம்மாள் கோர்ட்டில் ஆஜராகி, தமக்குக் கணவனிடம் மனஸ்தாபமில்லையென்றும், கணவனது பெற்றோர்கள்தான் தம்மைத் துன்புறுத்துவதாகவும் வாக்கு மூலம் கொடுத்தார்.

பிள்ளையின் தகப்பனர் தாம் தமது பிள்ளைக்குத் தனிக்குடித்தனம் வைப்பதாகவும், நாட்டுப் பெண்ணை உபத்திரவப்படுத்துவதில்லையென்றும் கோர்ட்டில் ஒப்புக்கொண்டார். பெண்ணை அவளது கணவனுடன் அனுப்பும்படி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஸ்ரீமான் எம். எஸ். வெங்கடராமஐயர் மனுதார் தரப்பிலும், ஸ்ரீமான் பி. வி. வல்லபாச்சார்லு பிரதிவாதி தரப்பிலும் ஆஜரானர்கள்.

இன்ஸால்வெண்டிலிருந்து விடுதலை

சென்னை, செப் 7—

திருச்சி. திருநெல்வேலி, மதுரை. சென்னை. கொழும்பு முதலிய பலவிடங்களில் பாங்கி வியாபாரம் நடத்திவந்த எஸ். என். கம்பெனி இன்ஸால்வெண்டாகிவிட்ட விஷயம் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அக்கம்பெனி முதலாளிகள் தாங்கள் கடன் காரர்களுக்கு ரூபாய்க்கு 4 அணா வீதம் கொடுத்தாகிவிட்டதென்றும், ஆகவே தங்களை இன்ஸால்வெண்டிலிருந்து விடுதலை செய்யவேண்டுமென்றும் ஜஸ்டிஸ் வாட்ஸ்வொர்த் முன்பாக மனுச் செய்துகொண்டார்கள். இதுவரை கடன்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகை தவிர மீண்டும் ரூபாய்க்கு 2 அணா வீதம் கொடுக்க [illegible] கம்பெனியின் பணமிருப்பதாக அபீஷியல் அஸைனி தெரிவித்தார்.

நீதிபதி எஸ். என். கம்பெனியை இன்ஸால்வெண்டிலிருந்து விடுதலை செய்து உத்தரவு பிறப்பித்தார்.

ஸ்ரீமான்கள் எஸ். துரைஸ்வாமி ஐயர், பி. ஜே. குப்பண்ணாராவ், ஆர். வெங்கடராம ஐயர் ஆகியவர்கள் மனுதார்கள் தரப்பில் ஆஜரானர்கள்.

உயர் ரக
வைரங்களுக்கு
சூராஜ்மல்ஸ்
813, எஸ்பிளனேட், மதராஸ்.

சென்னை மாகாண தபாற்காரர் சங்கம்

சென்னை, செப் 9—

சென்னை மாகாண தபாற்காரர் சங்கம் சென்னை கிளைச்சங்கத்தின் கூட்டம் சென்ற செவ்வாய்க்கிழமை யன்று மாலை பார்க்டவுன் வால்டாக்ஸ் ரோட்டிலுள்ள பரமானந்ததாஸ் சோடதாஸ் சத்திரத்தில் சங்கத்தின் தலைவர் அட்வகேட் ஸ்ரீமான் டப்ளியூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு தலைமையில் நடைபெற்றது.

ஒருவர் போட்டுக் கொள்ளும் உடுப்பை மற்றொருவர் போட்டுக் கொள்ளவேண்டுமென்று அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதை கூட்டம் ஆக்ஷேபித்து அவ்வழக்கம் சுகாதாரத்திற்கு விரோதமாகையால் அதை யொழிக்க வேண்டுமென்றும், இது விஷயமாக வைத்திய நிபுணர்களைக் கொண்டு ஒரு பொதுக்கூட்டம் நடத்தவேண்டுமென்றும் அடுத்த அக்டோபர் மாதத்தில் சென்னையில் ஒரு மாகாண மகாநாட்டை நடத்தி வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாகாண சங்கத்தைக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்றும் சொல்லி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்ஸ்பெக்டிங் போஸ்டுமாஸ்டர் விஷயமாக அங்கத்தினர்கள் சில புகார்களை எடுத்துச் சொன்னர்கள்.

சத்யமூர்த்தி-வைஸிராய் சம்பாஷணை

இன்று நடைபெறும்

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

ஸிம்லா, செப் 9—

தம்மை பேட்டி காண வரும்படி வைசிராய் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தியை அழைத்திருப்பதாகவும் இன்று இருவரும் சம்பாஷிப்பாரென்றும் தெரிகிறது. வைசிராய் மத்திய சட்டசபை கட்சித்தலைவர்களுடன் சம்பந்தம் கொள்ளக் கொண்டிருக்கும் விருப்பம் பொதுவாகப் பாராட்டப்படுகிறது.

வைசிராய் பிரசங்க பகிஷ்காரப் பிரச்னை

திங்கட்கிழமை மத்திய சட்ட சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் வைசிராய் பேசும் பொழுது அக்கூட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி போகமாட்டாதென்று ஒரு நியூஸ் ஏஜென்ஸி செய்தியை அனுப்பியிருந்தது. இது அவசரப்பட்டு அனுப்பப்பட்ட செய்தியாகக்கருதப்படுகிறது. இன்னும் கட்சியே கூடவில்லை. ஞாயிற்றுக்கிழமைக் கூட்டத்தில் தான் இவ்விஷயம் ஆலோசிக்கப்படும். அச்செய்தியில் சொல்லப்பட்டபடி காங்கிரஸ்காரியக் கமிட்டி திட்டமான விதி செய்திருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. முதலில் காந்திஜீயையும் தற்போது புலாபாய் தேசாயையும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியையும் வைசிராய் அழைத்துப் பேசியிருப்பதால் இப் பிரச்னை சம்பந்தமாகப்புதிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

உத்தியோக விஷயங்கள்

சென்னை. செப் 9—

ஹைக்கோர்ட்டு நீதிபதியாக விருந்துவரும் மிஸ்டர் டபிள்யூ ஓ. நியூஸாம் சித்தூர் ஜில்லா ஜட்ஜாக நியமனம். இப்பொழுது சித்தூர் ஜில்லா ஜட்ஜாகவிருக்கும் மிஸ்டர் ஸஹாபுடீன் திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜட்ஜாக நியமனம்.

மிஸ்டர் ஸஹாபுடீன் வேலையை ஒப்புக்கொண்ட பிறகு மிஸ்டர் எம் வி. பாலகிருஷ்ணய்யா, ஐ.சி.எஸ். சேலம் ஜில்லா ஜட்ஜாக ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாருக்குப் பதில்) நியமனம். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் அந்த ஊர் சப் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பட்ஜெட்டில் காங்கிரஸ் கொள்கைகள் தோற்றம்

மேல் சபை மெம்பர்கள் பாராட்டு

மதுவிலக்கு திட்டத்துக்கு கனம் வி.எஸ். எஸ். சாஸ்திரியின் ஆதரவு

ராஜாங்க சபையில் வரவு செலவு திட்ட விவாதம்

சென்னை, செப் 5— [illegible]

டாக்டர் பி. ஜே. தாமஸ்

[illegible]

கிராமப் புனருத்தாரணம்

[illegible]

மதுவிலக்கு திட்டம்

[illegible]

நிதானம் வேண்டும்

[illegible] லாக்களில் அமுலுக்குக் கொண்டு வரலாம். இந்த மதுவிலக்குத் திட்டத்தை அகில இந்தியத்திட்டமாக அமுலுக்குக் கொண்டுவருவது அதிக பலனளிக்குமென்று அபிப்பிராயப்படுகிறேன்.

ஸ்ரீமான் ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார்

பிறகு பேசியதாவது:—விவசாயிகளுக்கு இந்த பட்ஜெட்டில் எவ்வித உதவியு மளிக்கப்படவில்லையென்று ஸ்ரீமான் பி. நாராயணஸ்வாமி நாயுடு கூறியது மிகவும் தவருகும். இந்த பட்ஜெட் சம்பந்தப்பட்ட வரையில் முழுப் பொறுப்பையும் புதிய மந்திரிகள் ஏற்கத் தயாராகவிருந்தாலும் அவர்கள்மீது முழுப்பொறுப்பைச் சுமத்துவது சரியாகாது இந்தபட்ஜெட்டைப்பற்றிய பொறுப்பில் பாதி பழைய மந்திரிகளைச் சேர்ந்தது. புதிய மந்திரிகள் தங்களுக்கிருந்த குறைந்தகாலத்திற்குள்ளாக பழைய பட்ஜெட்டை தூக்கி எறிந்துவிட்டு மிகவும் புதிய பட்ஜெட்டொன்று தயாரிப்பது சாத்தியமல்ல. பழைய பட்ஜெட்டில் அங்கும் இங்கும் சில காங்கிரஸ் அம்சங்களைக் காட்டி பொதுஜன நன்மைக்கு அவசியமான சில புதிய திட்டங்களை நுழைப்பது தான் புதிய மந்திரிகள் அவர்களுக்கிருந்த குறைந்தகாலத்தில் செய்யக்கூடிய காரியம்.

ரிஷிகளும் சந்நியாசிகளும் ஆவிர்ப்பவித்த நாட்டில் மதுவிலக்கு திட்டம் வெற்றிகரமாகநிறைவேறுமென்பதில் சந்தேகமேயில்லை. சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் திட்டம்நிறைவேறினுல் அந்த ஜில்லாவின் ஏழைமக்களின் பணத்தில் ஒரு கோடி ரூபாய் மீதியாகும். ராட்டைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 2 லக்ஷ ரூபாய் மிகவும் குறைந்ததொகையென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

கனம் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரி

பிறகு பேசியதாவது:—காங்கிரஸ் கக்ஷி அதிகார ஸ்தான மேற்றதைமகிழ்ச்சியுடன்வரவேற்றவர்களுள் நான்ஒருவன். 6 வாரகாலத்துக்கே தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டில் மிகுந்த ஜாக்கிரதையும் முன் யோசனையும் காட்டப்பட்டிருப்பது போற்றத்தக்கது இந்த பட்ஜெட்டில்காங்கிரஸ் திட்ட முழுவதும் காணப்படவில்லையென்று கூறுவது அளவுக்குமீறி எதிர்பார்ப்பதாகும்.

> காங்கிரஸ் திட்ட முழுவதையும் இந்த பட்ஜெட்டில் தோற்றுவிப்பது முடியாத காரியம். பிற்காலத்தில் அதிக நன்மைகள் செய்யப்படு மென்பதற்கு அறிகுறியான பல அம்சங்கள் இந்த பட்ஜெட்டில் காணப்படுகின்றன. ஜனங்களுக்கு சுத்தமான குடிநீர் வசதியளிப்பதும் அவர்களை குடிப் பழக்கத்தினின்று மீட்பதும்சிலாகிக்கத்தக்க இருகாரியங்கள். இந்த இரண்டு காரியங்களையும் செய்து முடித்து தங்களுடைய ஒரு உன்னதமான லக்ஷியத்தை யடைவது பற்றி எந்த மந்திரி சபையும் பெருமையடையலாம்.

பிரதம மந்திரியும் அவருடைய சகாக்களும் மேற்கூறிய பெரிய காரியங்களை நடத்த முன் வந்திருப்பதுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அந்த திட்டங்கள் நிறைவேறும்வரை அவர்கள் தங்கள் ஸ்தானங்களை வகிப்பார்களென்றும் நம்புகிறேன். பொது சுகாதார இலாகா எனது நண்பரான டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனிட மிருக்கிறது. அவர் மந்திரிஸ்தான மேற்பதுபற்றி இதாமந்திரிகளைப் பாராட்டுவதா அல்லது மாகாணஜனங்களைபாராட்டுவதாவென்று எனக்குத்தெரியவில்லை.

குடியிலிருந்து கிடைக்கும் பணம்

டாக்டர் பி. ஜே. தாமஸ் அபினி வருமானம் போனதற்கும் மதுவிலக்கால் வருமானம் போவ [illegible] இந்தியாவில் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்ததால் இந்திய சர்க்கார் பாராட்டப்படவேண்டியவர்கள் ஆனல் இந்தியாவின் வருமானமும் போய் சீனமக்களும் உருப்படாதது பற்றிதான் நான் வருந்துகிறேன். மதுவிலக்கு திட்டத்தாலேற்படும் செலவு எப்படி இருந்தபோதிலும் இவ்விஷயம் மிகவும் முக்கியமானது.

> ஜனங்களின் குடிப்பழக்கத்திலிருந்து மாகாணத்துக்கு அதிக வருமானம் கிடைக்கிறதென்பது வெட்கப்படத்தக்க விஷயம்; இந்த நிலைமையிலிருந்து சர்க்கார் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டியது அவசியம். மாகாண வருமானத்தில் நஷ்டமேற்பட்டபோதிலும் ஜனங்களைக்குடிப்பழக்கத்திலிருந்து மீட்க பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் முயலவேணடும.

வீர மொழிகள்

இப்பொழுது அமுலுக்குக்கொண்டுவரப்பட விருக்கும் திட்டம் பரீக்ஷார்த்தமாகச செய்யப்படுவதல்லவென்று பிரதம மந்திரி கூறுவதுதான் கொஞ்சம் அதிகப்படியான காரியமென்று எனக்குத்தோன்றுகிறது அவர் கூறுவது வீர மொழிகள் தான். இந்தத் திட்டம் தமது ஜில்லாவில் வெற்றிகரமாக நிறைவேறு மென்பதில் பிரதம மந்திரிக்குச் சந்தேகமேயில்லையா? மாகாண வருமானம் குறைத்தால் மாத்திரம் ஜனங்கள் ஒழுங்கான வழிக்கு வந்து விடுவார்களென்று சொல்லமுடியாது. மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வருவதில் தொண்டர்களுடைய பிரசாரம் மிகவும் உதவியாகவிருக்குமென்று பிரதமமந்திரியும் அவரது சகாக்களும் நம்புகிறார்கள். சம்பளமில்லாது உழைக்கும் தொண்டர்களுடைய வேலையைப் பற்றி எனக்கு மிகவும் உயரிய அபிப்பிராயமுண்டு. ஜனங்களைக் குடிக்க வேண்டாமென்றும், கள்ளத்தனமாகக் கள்ளிறக்குபவர்களைத் தடுப்பதற்கும, பிரசாரம் செய்யும்விஷயத்தில் இந்தத்தொண்டர்களை மாத்திரம் நம்பி மதுவிலக்குத் திட்டத்தைஅமுலுக்குக் கொண்டுவருவதற்கு இரவும் பகலும் இடைவிடாது பிரசாரம் செய்யக்கூடிய ஸ்தாபனமொன்று ஏற்படுத்தும் விஷயத்தைசர்க்கார் யோசிப்பார்களென நம்புகிறேன். இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்திருக்கும் காலத்தை நோக்கும்போதுதான் எனக்குச் சிறிது நம்பிக்கை குறைகிறது. மூன்று வருஷ காலத்தில் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது சாத்தியமென நம்புவதுதான் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது இந்தத் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வருவதில் மந்திரிகள் நிதானமாகவே காரியங்களைச் செய்வார்களென்றும் தகுந்த ஸ்தாபனங்களை உபயோகப்படுத்திக் கொள்வார்களென்றும் எதிர்பார்க்கிறேன்.

ராட்டைத் தொழில்

ராட்டைத்தொழிலுக்கு இரண்டு லக்ஷ ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைந்த தொகை. ராட்டைத்தொழிலுக்கு உதவியளித்ததற்கும்ஜவுளிக்கடைக்கு லைசென்ஸ் கட்டணம் வைத்ததற்கும் என்ன சம்பந்தமென்று தெரியவில்லை. ராட்டைத் தொழிலுக்கு அளிக்கப்படும் கிராண்டை என் பொது வருமானத்திலிருந்து கொடுக்கக்கூடாது? இந்தப் புதிய வரி போடவேண்டிய அவசியமென்ன? இக்கேள்விகளுக்குச் சரியானபதில் பட்ஜெட்டில்கிடைக்கவில்லை. இவை தெளிவுபடுத்தப்படவில்லை. இம் மாகாணத்தில் கைத்தொழிலபிவிருத்திபற்றித் தமது அபிப்பிராய மென்னவென்பதைப்பிரதமமந்திரி தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். பிரதமமந்திரிக்கும் அவரது சகாக்களுக்கும் மில்தொழிலபிவிருத்தியில் ஆக்ஷேபணை உண்டா? மில் தொழில் செய்பவர்களை ஏன் அதைரியப்படுத்த வேண்டுமென்பதும் குடிசைத் தொழிலுக்கு மில் தொழில் சத்துருவென்று ஏன் நினைக்க [illegible] வேண்டுமென்பதும் எனக்குப் புரியவில்லை.

இந்தச் சில்லரை விஷயங்களை ஒதுக்கிவிட்டுப்பார்த்தால், ஏழை ஜனங்களுக்கு உதவிசெய்வதற்கே காங்கிரஸ்காரர்கள் மந்திரிஸ்தான மேற்றிருக்கிருர்களென்பதற்கு இந்தப் பட்ஜெட்டில் சூசனைகளிருக்கின்றன.

சம்பளவெட்டு

நூற்றுக்கு $2\frac{1}{2}$ முதல் 30 வரை உத்தியோகஸ்தர் சம்பளங்களைக் குறைக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது இதைப்பற்றித் தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. ரூ. 100-க்குக் குறைந்த சம்பளங்களைக் குறைக்கக்கூடாதென நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆனல் சர்க்காரில் குறைந்த சம்பளம் வாங்குபவன் 'இந்த உத்தியோகத்துக்கு ஏன் வந்தோம்?' என்று நினைக்கும் நிலைமையை ஏற்படுத்தக்கூடாதெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் எல். சுப்பராவ்

பேசியதாவது:—முன்னிருந்த மந்திரி சபை பிரசாரத்தின்மூலம் குடிப்பழக்கத்தை நிறுத்தமுயன்றது அது பிரயோசனப்படவில்லை. ஆகையால் தான் மதுவிலக்குத்திட்டமேற்படுத்தவேண்டியது அவசியமாயிற்று

ராட்டைத்தொழிலுக்குப்பாதுகாப்பளிப்பதற்கே மில் ஜவுளிகளுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. தற்காலம் மில் தொழிலைப்போல் ராட்டைத் தொழில் அபிவிருத்தியடைந்திருக்கவில்லை.

ஜனப் அஹமத் மீரான்

பிறகு பேசியதாவது:—காங்கிரஸ் அம்சங்கள் பல தோன்றும் இந்த பட்ஜெட்டைத்தயாரித்தது பற்றி நான் பிரதம மந்திரியைப் பாராட்டுகிறேன். மதுவிலக்குத் திட்டமும், ராட்டைத் தொழிலுக்கு உதவியும், ஏழை மக்களுக்குக் குடி நீர் வசதியளிக்கும் திட்டமும் வேறெந்த பட்ஜெட்டிலும் எதிர் பார்க்க முடியாத அம்சங்கள்.

> மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுமென்பதில் சந்தேகமேயில்லை. ஒவ்வொருவர் வீட்டுக்கொல்லைப்புறத்திலும் தென்னை மரங்களிருப்பதால் அவரவர்கள் கள்ளிறக்குவார்களென்று கூறுவது பிசகு. குடிப் பேயை ஒழிக்கச் சட்டம் பிரயோசனப்படாதென்று சிலர் கூறுகிறார்கள். திருடுபவர்களுக்குத் தண்டனை கொடுக்கச் சட்ட மிருக்கிறது. திருட்டு நிற்கவில்லையென இந்தியன் பினல்கோடை ஒழித்து விடுகிறதா?

திருட்டைப் போலீஸ் உதவியைக்கொண்டு மாத்திரம் நிறுத்த முடிந்திருக்கிறதா? இல்லை. சமூகத்தின் ஒழுங்கான அபிப்பிராயத்தாலேயே இந்தக் கெடுதல்கள் ஒழிகின்றன. சிலர் கள்ளத்தனமாகக் கள்ளிறக்கி விற்கலாமென்பது உண்மை. ஆனல், இந்த மதுவிலக்குத்திட்டமபாதிநிறைவேறினுல் கூட அதைப்பற்றியும் நாம் பெருமையடையலாம். குடிப்பழக்கத்தை ஒழிக்கப்பிரசாரம் மாத்திரம் போதாது. சட்டமிருந்தால் தான் இத்திட்டத்துக்கு ஏதாவது விமோசனமுண்டு. (மற்றக்கக்ஷியார் கரகோஷம்)

மற்றொரு கெடுதலைப்பற்றிச்சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குதிரைப் பந்தயங்களில் பெரிய குடும்பங்கள் பணவிரயம் செய்து சீரழிந்து போயிருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் இந்தக் குதிரைப்பந்தயக்கிளப்புகளை மூடிவிடவேண்டும். குதிரைப்பந்தயங்கள் நடைபெறுமிடத்திற்கருகில் கூட நமது மந்திரிகள் போகக் கூடாதெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். (சிரிப்பு)

ஸ்ரீமான் பெத்திராஜு

பிறகு பேசுகையில், முகத்வார ஜில்லாக்களில் கிராமங்களுக்கும் நல்லரஸ்தாக்கள் போடவேண்டுமென்றும், கோதாவரி மேல் திசை முகத்வாரத்தில் சாக்கடை வசதி செய்து கொடுக்கவேண்டுமென்றும் ரெவினியூ போர்டை எடுத்து விட வேண்டுமென்றும் கூறினர்.

ஸ்ரீமான் எம். டி. டி. குமாரசாமி முதலியார்

கடைசியாகப் பேசுகையில், பாபநாசம் நீர்வீழ்ச்சியை விவசாயத்துக்கு உபயோகப் படுத்திக் கொள்ள முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பிறகு சபை கலைந்தது. மீண்டும் நாளை மாலை 2 மணிக்குக் கூடும்.

"இரத்தக் கொதிப்பே உங்கள் வலுக்குறைவுக்குக் காரணம். கல்ஸானு சாப்பிடுங்கள்; புதிய வலுவு பெறுவீர்கள்"

கணவன். "கல்ஸானு சாப்பிட்டதிலிருந்து என் ஜீவசக்தி உயர்த்து விட்டது."

வாலிப வலுவு

கல்ஸானு இரத்தகோசங்களுக்கும், தசைகளுக்கும் வலுவூட்டுகிறது: தேக உறுப்புகள் ஒவ்வொன்றிற்கும் உரமளிக்கிறது; மீண்டும் தேகம் பூராவும் வாலிப சக்தி ததும்பும்படிச் செய்கிறது.

"தலைவலி, தசைச்சோர்வு, முதலிய நோய்களால் சதா நான் அவதிப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனல் கல்ஸானு சாப்பிட ஆரம்பித்ததும் பல நோய்கள் மாயமாய் மறைந்துவிட்டன." என்று ஈபோவிலிருந்து (F. M. S.) மிஸ்டர் CH. WS. எழுதுகிருர்.

சொற்பகாலம் கல்ஸானு சாப்பிட்டால் வயோதிகத்தின் சின்னங்கள் தடைபட்டுவிடும். கல்ஸானு புதிய வாலிபமளித்து கல்யாண வாழ்விற்கு இன்பமூட்டுகிறது

தாமதிக்கவேண்டாம்! உங்களுக்கருகிலுள்ள மருந்து வியாபாரிகளிடமிருந்து ஒரு புட்டி கல்ஸானு மாத்திரைகள் வாங்கிக்கொள்க. விரைவில் நீங்கள் ஆரோக்கியமும், இளமையும் பெறுவீர்கள்.

Kalzana

மேலான ஆரோக்கியமளிக்கும் உலோக உணவு கைபடாமல் தயாரிக்கப்படுவது.

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யப்படும். விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமை

யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத் தெரிந்து கொள்ளுதல். நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமல் போன சாமான்களைக் கண்டு பிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்துகொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினுல், ஒரே வினடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபாற் கூலி அணு 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

ASTHMA

நிவர்த்தி தான் முக்கியம்.

65 வருஷங்களாக காச நோயால் வருந்துபவர்களுக்கு ஹிம்ராட்ஸ் சிறந்த நிவர்த்தி யளித்து வருகிறது.

மேலானதை வாங்குவதே லாபம். அசல் சாக்கையே கேளுங்கள்.

HIMROD'S CURE

No. 2

உங்கள் வருங்கால அதிர்ஷ்டம்

பண்டிட் M R. K. மூர்த்தி. பண்டிட் E. S. K. சுவாமி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள் வரை பொதுப் பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

ஜோதிடக் கழகம்.
38, தேவராஜ முதலி தெரு,
பி. டி. மதராஸ்

அழகின் அஸ்திவாரம்

வெறும் வசீகரத்தால் மட்டுமே அழகு சோபித்து விடுவதில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும் மாசற்ற வசீகரம் தான் அழகின் அஸ்திவாரம். வசீகரத்தில் ஏதோ தோஷமிருக்கிற தென்பதற்காக எத்தனையோ பெண்கள் புறக்கணிக்கப்படுகிருர்கள். மிருதுத் தன்மையோ, மினுமினுப்போ இல்லாததும் வேர்க்குரும், மடிப்புகளும், தளர்ச்சியுமுடையதுமான சருமத்தைத் தான நாம திருத்திக் கொள்ள வேண்டும். அசங்கியமான வசீகரத்தைக் சட்டையைக் கழற்றி எறிவது போல அப்புறப்படுத்தி விடலாம். அதற்கு பதிலாக அழகும் தேஜஸும் ததும்பும் புத்தப் புதிய சருமத்தை வளர்க்கலாம். இது அவ்வளவு செலவானதுமல்ல. ஒரு அவுன்ஸ் அல்லது இரண்டு அவுன்ஸ் மர்க்கலைஸ்ட் மெழுகு Mercolized Wax வேண்டும். இவ் வற்புத மெழுகை இரவில் முகத்திலும், கழுத்திலும் தடவினுல் சருமத்தில் மேற்கண்ட மாறுதல் ஏற்பட்டு விடுகிறது. வெல்வெட் போன்ற புதிய சருமம் தோன்றுகிறது. அழகியது. ஏதோ மாயா ஜாலம் போலிருக்கலாம். உண்மையிலேயே அப்படித்தான்! மெழுகைப் பத்து நாட்களுக்குஉபயோகித்துப் பாருஙகள். பலனைக் கண்டு ஆச்சர்யப் படுவீர்கள்.

மர்க்கலைஸ்ட் மெழுகு Mercolized Wax மிருசக் கொழுப் ற்றது.